**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

## MCOP 58/2023

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் நாள் வியாழன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நாகலிங்கம் | த/பெ.: | அம்மாசி |
| கிராமம்: | மாங்குடி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாய கூலி வேலை |
| வயது: | 63 | முகவரி: | 228, ஆதிதிராவிடர் தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 19.10.2023

**ம.சா.1ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மனுவின் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 10.01.2020 | முதல் தகவல் அறிக்கை - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.2 | 09.01.2020 | டிஸ்சார்ஜ் சம்மரி - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.3 | 13.11.2019 | இன்சூரன்ஸ் பாலிசி -ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.4 | -- | ஆர்.சி. புக் - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.5 | -- | Learner's License – Xerox Copy |

**<u>1ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

விபத்து சமயத்தில் அந்த வாகனத்தில் 11 பேர் பயணித்தோம் என்றால் சரிதான். இந்த விபத்தானது 2020 ல் நடந்தது என்றால் சரிதான். எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காண்பிக்கும் ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னார் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அரசு மருத்துவமனையில் எடுத்த சிகிச்சை எல்லாம் இலவச மருத்துவம் தான். மருத்துவ ரீதியாக எந்தவித செலவினமும் ஏற்படவில்லை என்றால்

சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயம் எல்லாம் முழுமையாக சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. தனியார் மருத்துவசிகிச்சை எடுத்தது எல்லாம் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக எனது இயலாமையை மிகைப்படுத்தி கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நாய் குறுக்கே சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நாய் குறுக்கே வரவில்லை என்றால் இந்த விபத்து நடந்திருக்காது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநர் சீரான வேகத்துடனும், கவனமாகவும் தான் வாகனத்தை ஒட்டினார் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நேரத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஒட்டுநருக்கு முறையான ஒட்டுநர் உரிமம் உள்ளது என்றும், அதை 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு பாலிசியானது நடைமுறையில் இருந்தது என்று சொன்னால் சரிதான். அதனால் நஷ்டஈடு ஏதும் கேட்கவேண்டும் என்றால் 2ம் எதிர்மனுதாரரிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காண்பிக்கும் ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தில் 9 பேர் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு மாறாக 11 பேர் வாகனத்தில் பயணித்ததால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்துவிட்டது என்றால் சரியல்ல. இந்த வாகனத்தை ஒட்டிய 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஒட்டுநர் உரிமம் இல்லை என்றும், அந்த ஒட்டுநர் வாகன காப்பீடு விதிமுறைகளுக்கும் ஒப்பந்தத்திற்கும் மாறாக செயல்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல . இந்த விபத்துக்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ செலவினங்களுக்கான பில்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. நான் எவ்வித ஆதாரமுமின்றி மிகைப்படுத்தி இவ்வழக்கில் நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஓம்.கே.சக்திவேல்,
சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.